**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 85/2025**

**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சுரேஷ்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. அந்தோணி முத்து** | **Calling** | : | |
| **Village** | : | **சவேரியார்பாளையம்** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **40** |
| | | | **Dated** | : | **21.08.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 4 (பட்டியல் சாட்சி 4), **திரு. சுரேஷ்குமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து CMS தோல் ஷாப்பில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அசா. 1 முதல் அசா. 3 ஆகியோரை தெரியும். அசா. 1 எனது மைத்துனர். அசா. 2 எனது அண்ணன். அசா. 3 எனது சகோதரி. எனது அண்ணன் ஜெகதீஸ்குமார் என்பவருக்கும் ஜான்பால் என்பவருக்கும் இடையே பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை இருந்து வந்தது. எனது அண்ணன் ஜெகதீஸ்குமாரிடம் இருந்து சீட்டு பணம் ரூ. 4,50,000/- மும், தனியாக பணம் ரூ. 2500/- ஒவ்வொரு மாதமும் கட்டி வந்த நிலையில், பணத்தை திருப்பி தராமல் ஊரைவிட்டு ஓடிவிட்டார். கடந்த 11.03.2024ம் தேதி மாலை சுமார் 04.30 மணி அளவில் பாய்கடை அருகே எனது மைத்துனர்

அந்தோணி ஆரோக்கியதாஸ், என் அண்ணன் ஜெகதீஸ்குமார் மற்றும் நானும் மூவரும் நின்று பேசிக் கொண்டு இருந்தபோது, அந்த வழியாக மேற்படி ஜான்பாலின் மகன் ஹரி என்பவர் வருவதைப் பார்த்து எனது அண்ணன் ஜெகதீஸ்குமார், ஹரியிடம் எங்கடா உங்க அப்பா, ஏலச் சீட்டு பணத்தையும், என்னிடம் வாங்கிய பணத்தையும், திருப்பி தராமல் ஏமாற்றிவிட்டு ஊரைவிட்டு போய்விட்டார் என கேட்டார். அப்போது ஆஜர் எதிரி அந்த இடத்திற்கு வந்து ஏன் என் சொந்தக்கார பையன் ஹரியிடம் விசாரித்துக் கொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்டுக் கொண்டு இருக்கும்போதே எனது அண்ணனுக்கும், ஆஜர் எதிரிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. அதன் பிறகு அங்கு இருந்து சென்று விட்டார்கள். அன்றைய தினமே மாலை 05.00 மணிக்கு எனது தங்கை ஆந்தோணியம்மாள் வீட்டில் நானும், எனது மைத்துனர் அந்தோணி ஆரோக்கியதாஸ், எனது அண்ணன் ஜெகதீஸ்குமார், எனது தங்கை ஆந்தோணிம்மாள் ஆகியோர் வீட்டில் இருந்தபோது, ஆஜர் எதிரி மது அருந்திவிட்டு எனது வீட்டின் முன்பாக வந்து, தேவிடியா மகனே என கெட்ட வார்த்தையில் திட்டிக் கொண்டு இருக்கும்போது, நான் எதற்கு இப்படி வீட்டின் முன்பு வந்து கத்திக் கொண்டு இருக்கிறார் என கேட்டதற்கு, என்னை ஆஜர் எதிரி அடித்து கீழே தள்ளிவிட்டார். எனது மைத்துனர் அந்தோணி ஆரோக்கியதாஸ் அவரை தடுக்க முற்பட்டபோது, எதிரி கையில் வைத்து இருந்த கத்தியால் என் மைத்துனரின் இடது கன்னத்தில் கொன்றுவிடுவேன் என்று மிரட்டிக் கொண்டே வெட்டினார். மேலும் என் மைத்துனரின் வயிற்றில் கத்தியால் குத்த முற்பட்டபோது, அதை அவர் தடுத்தபோது, அவருடைய இடது மோதிர விரலில் காயம் ஏற்பட்டது. பிறகு அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஓடிவரவும் அங்கு இருந்து எதிரி ஓடிவிட்டார். காயம்பட்ட எனது மைத்துனரை ஆட்டோவில்

ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கு வந்து போலீசார் என்னை விசாரித்தார்கள். அதன் பிறகும் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

போதுமான வாய்ப்பு அளிக்கப்பட்டும் எதிரி தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

Taken down by me/before me in open court on 21.08.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..)Tmt.V.Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.